# பிராந்திய அபிவிருத்தி அமைச்சு

## வருடாந்த செயலாற்று அறிக்கை

## (2017.01.01 இலிருந்து 2017.12.31 வரை)

# பொருளடக்கம்

**பக்க இலக்கம்**


i. கௌரவ அமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

ii. செயலாளரின் வாழ்த்துச் செய்தி

iii. பொருளடக்கம்

iv. நோக்கும் செயற்பணியும்


## பகுதி I

பிராந்திய அபிவிருத்தி அமைச்சு


1. பின்னணி 01

2. கடமைகளும் தொழிற்பாடுகளும் 02

3. உபாய வழிமுறைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அமுலாக்கல்கள் 03

4. 2017 செயலாற்றுகை (2017.12.31 ஆம் திகதியன்று)

4.1 மனித வள விருத்தி

4.1.1 பதவியினர் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் 04-05

4.1.2 பதவியினர் வினைத்திறன் விருத்தியும் பயிற்சியளித்தலும் 06-07

4.2 மூலதன முதலீடு 07

4.2.1 வருடாந்த நிதி ஒதுக்கீடும் நிதிசார் முன்னேற்றமும் 08

4.2.2 பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 09-10

4.2.3 பிராந்திய உள்ளக கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 11

4.2.4 பன்முகப்படுத்தப்பட்ட மூலதன வரவு செலவுத்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 12

4.3 அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை நிறுவுதல் 13

4.4 பிராந்திய அபிவிருத்தி அலகுகள் 14-15

4.4.1 மத்திய அபிவிருத்தி அலகு 14

4.4.2 கிழக்கு அபிவிருத்தி அலகு 15

# பகுதி II

## இலங்கை ஹதபிம அதிகாரசபை

நோக்கு / செயற்பணி

1. அறிமுகம் 16
2. நோக்கெல்லை 16

3. 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை 17

3.1 மனித வள விருத்தி

3.1.1 ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் 17-18

3.2 மூலதன முதலீடு 19-24

3.2.1 மண் அரிப்பு பாதுகாப்பு மற்றும் நீர் வரப்பு முகாமைத்துவம் 19

3.2.2 பண்ணைகளுக்கு வெளியேயான மண்ணரிப்பு பாதுகாப்பு மற்றும் இடர் நீர் முகாமைத்துவம் 20

3.2.3 மண் அரிப்பு போசணை முகாமைத்துவம் 20

3.2.4 காணி வினைத்திறன் மற்றும் பயிர் பல்வகைப்படுத்தல் வேலைத்திட்டம் 21

3.2.5 நிறுவன அபிவிருத்தி நடவடிக்கைகள் 21

3.2.6 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் 22

3.2.7 தேசிய உணவு உற்பத்தி செயற்பாடு 22-24



## அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

பிராந்திய அபிவிருத்தியானது இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றில் விசேட கவனம் செலுத்தப்படுகின்ற ஓர் துறையாகும். பல்வேறு வரிசை அமைச்சுக்கள் இந்த விடயத்துடன் தொடர்புடைய அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கையினை எடுத்திருந்த போதிலும், இந்தத்துறையிலிருந்து விலகியுள்ள ஏனைய பல்வேறு விடயங்கள் குறித்து இதுவரை அடையாளங் காணப்பட்டுள்ளன. எனவே, பிராந்திய ஏற்றத்தாழ்வுகளினைக் குறைப்பதன் மூலம் நிலையான அபிவிருத்தியினை அடைவதற்காக முன்னெடுக்கப்படும் வினைத்திறன் மற்றும் பயனுறதி வாய்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கினை திட்டமிடுவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் எனது அமைச்சு பொறுப்பு வாய்ந்த்தென்பதனை நான் கவனத்தில் கொள்கின்றேன்.

பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் வெளிநாட்டு நிதியளிப்புக்களுடன் அமுல்படுத்தப்பட்ட போதிலும் நாம் எவ்வித தலையிடுமின்றி சதந்திரமாகவே இயங்கியுள்ளதுடன் இதுவரையில் இலக்கினை அடைவதற்கு எவ்வித இடையூறும் எமக்கு ஏற்பட்டிருக்கவில்லை.

இந்த நாடானது ஒவ்வொரு அமைச்சுக்கும் வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படும் வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாடுகளினை மட்டும் பயன்படுத்தி இந்த நாட்டினை அபிவிருத்தி செய்ய முடியமென நான் நம்பவில்லை. எனவே, புதிய வேலைவாய்ப்புக்களினை உருவாக்குவதற்கு பாரிய அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேற்கொள்வதற்குச் சாத்தியமாக அமையக்கூடிய நேரடி வெளிநாட்டு முதலீடுகளினை ஊக்குவிப்பதும் தேவைப்படும் அந்நியச் செலாவணியைச் சேமிப்பதும் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

அதற்கிணங்க, 2017 இல் அமைச்சானது பாரியளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்களினை மேற்கொள்ள விரும்புகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் எண்ணிக்கையினை இனங் கண்டுள்ளதுடன் அவர்களுடன் ஆரம்ப கட்டத்திலான கலந்துரையாடல்களும் ஏற்கனவே நடாத்தப்பட்டுள்ளன. இக்கருத்தட்டங்களில் சில அமைச்சரவை அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவை உரிய தரப்புக்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

நான் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகள் அமைச்சின் பிரதான நோக்கங்களினை அடைவதற்கான முதலீட்டுக் கருத்திட்டங்களை திட்டமிடுவதற்கும் அமுல்படுத்துவதற்கும் வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். 2018 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளினூடாக இந்த அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன ஏற்பாடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 280% இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் எதிர்வரும் ஆண்டு காலப்பகுதியிலும் முறையான திட்டமிடலுக்கு அமைவாக வெற்றிகரமாக அமுல்படுத்தப்படும் என நம்புகின்றேன்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா
பிராந்திய அபிவிருத்தி அமைச்சர்



## செயலாளரின் வாழ்த்துச் செய்தி

“பிராந்திய அபிவிருத்தி என்பது” அபிவிருத்தி தொடர்பில் நாம் கலந்துரையாடுகின்ற போது அடிக்கடி பயன்படுத்தப்படுகின்ற ஓர் வார்த்தையாகும். இது பிரதானமாக “குறைந்த பொருளாதார அபிவிருத்தியினைக் கொண்டுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்” குறித்து விபரிக்கின்றது. அத்தகைய ஆதரவு நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இலக்குகள் என்பன ஒன்றுடன் ஒன்று வேறுபடும். அதற்கிணங்க, “பிராந்திய அபிவிருத்தி” எனும் பதமானது பரந்தளவிலான அர்தத்தினைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், கொள்கை வகுப்பாளர்கள் என்பது தற்போதிருக்கும் பிராந்திய ரீதியிலான வேறுபாடுகளினை குறைக்கும் நோக்குடன் வேலைவாய்ப்பு மற்றும் சொத்துக்களினை விரிவாக்கும் வகையில் பொதுவான நடவடிக்கைகளினை முன்னெடுப்பவர்களினைக் குறிப்பிடுகின்றது.

2016 இல் இந்த அமைச்சானது அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தாபிக்கப்பட்ட அதேவேளையில் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் குறித்தும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பிராந்திய அபிவிருத்தி அமைச்சானது அடைய வேண்டிய அதன் நோக்கங்கங்கள் குறித்தும் மேற்குறித்த விளக்கத்தில் உள்ளக்கப்படப்பட்டுள்ளது.

2017 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன ஒதுக்கீடுகளினை உரிய முறையில் பயன்படுத்துவதற்கு எமக்கு சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளமை குறித்தும் மீளாய்வு ஆண்டின் இறுதியில் அல்லது அதற்கு முன்பாக அவற்றினை முழுமையாக பயன்படுத்த முடிந்துள்ளமை குறித்தும் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பிராந்திய அபிவிருத்தி அமைச்சானது பிராந்திய ரீதியிலான வேறுபாடுகளினைக் குறைப்பதற்கும் குறைவிருத்தி நிலையிலுள்ள பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில் கிடைக்கக்கூடிய அனைத்து வளங்களினையும் முழுமையாகப் பயன்படுத்துவதற்கும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டுதல்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டு வரும் தேசிய உணவுப் பாதுகாப்பு தொடர்பான உணவு உற்பத்தி ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களினை ஊக்குவிக்கும் பொருட்டு 2018 ஆம் ஆண்டில் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளினையும் எடுத்து வருகின்றது. 2017 ஆம் நிதியாண்டிற்கும் வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடானது 280% இற்கு அதிகரித்திருப்பதையும் நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

ஏ.பி.ஜீ.கித்சிறி

செயலாளர்

பிராந்திய அபிவிருத்தி அமைச்சு

## நோக்கு

சமநிலையான பேண்தகு பிராந்திய அபிவிருத்தியினூடாக தேசிய பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்

## செயற்பணி

உச்ச வளங்களினைப் பயன்படுத்தி, பிராந்திய ரீதியாக விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்தி, சமூக வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்புதலும் வேலைவாய்ப்பின்மை மற்றும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தலும்.

# பகுதி I

## பிராந்திய அபிவிருத்தி அமைச்சு

### 1. பின்னணி

பிராந்திய கைத்தொழிலினை விருத்தி செய்தல் உள்ளடங்கலாக பிராந்திய பொருளாதாரத்தினை வலுவூட்டுவதற்குப் பொருத்தமான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் 2016.03.18 ஆம் திகதிய 1958/72 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக புதியதொரு அமைச்சரவை அந்தஸ்தினைக் கொண்ட அமைச்சாக பிராந்திய அபிவிருத்தி அமைச்சு தாபிக்கப்பட்டது. இலங்கை ஹதபிம அதிகாரசபையானது (“ஹரித தனவு” காணி அபிவிருத்தி நிலையம்) அமைச்சின் நோக்கல்லையின் கீழ் தொழிற்பட்டு வரும் ஒரேயொரு நிறுவனமாகும்.

நாட்டின் அனைத்து மக்களுக்கும் பொருளாதார பெறுபேறுகளும் வரப்பிரசாதங்களும் சமமான முறையில் பங்கீடு செய்யப்படுவதுடன் பிராந்திய அபிவிருத்தியும் சமமாக முன்னெடுக்கப்படுதலும் வேண்டும். அந்தவகையில், பல்வேறு உபாய மார்க்கங்களினூடாக முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுபேறுகள் நாட்டின் அனைத்துப் பிராந்தியங்களுக்கும் சமமமாக பங்கீடு செய்யப்படாமையினால் பிராந்திய பொருளாதாரத்தின் இடைவெளியானது மேலும் அதிகரித்துச் சென்றுள்ளதோடு குறைந்த அபிவிருத்திக்குட்பட்ட மாகாணங்களை பொருளாதார அபிவிருத்தியை நோக்கி முன்னெடுத்துச் செல்லவும் இயலாதுள்ளது.

இலங்கையில் மொத்த தேசிய உற்பத்திக்கான அதி உயர் பங்களிப்பான 39.7% மேல் மாகாணத்திலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள அதேவேளையில் வட மேலு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களிலிருந்து 10% - 10% வரை பெறப்படுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான ஆகக்குறைந்த 4% - 6% வரையிலான பங்களிப்பு (இலங்கை மத்திய வங்கி அறிக்கைக்கமைவாக) வடக்கு, கிழக்கு, வட மத்தி மற்றும் ஊவா மாகாணங்களிலிருந்து கிடைக்கப் பெறுகின்றது. இத்தகைய புள்ளிவிபரங்கள் பல்வேறு பிராந்தியங்களுக்கிடையே அபிவிருத்தி தொடர்பில் வேறுபாடு நிலவுகின்றமையினைப் புலப்படுத்தகின்றது. எங்களுக்கு முன்னே காணப்படும் சவாலானது பிராந்தியங்கிடையிலான வேறுபாட்டினைக் குறைப்பதன் மூலம் எவ்வாறு நிலையான அபிவிருத்தியினை நோக்கி முன்னேறுவது என்பதேயாகும்.

பிராந்திய அபிவிருத்தி அமைச்சானது பொருளாதார மற்றும் சமூக உள்ளக கட்டமைப்பினை பிரதானமாக வேலை வாய்ப்புக்களினை வழங்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வசதிகளினையும் குறைந்த விருத்தியினைப் பெற்றுள்ள பிராந்தியங்களினை நோக்கியதாக, கிராமப் புறங்களில் வாழ்வாதார அபிவிருத்திகளினை நோக்காகக் கொண்டு உள்ளக கட்டமைப்பு வசதிகளினைக் கொண்ட கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன் நோக்கம், ஒவ்வொரு பிராந்தியத்திலும் கிடைக்கக்கூடிய மூலவளங்கள்

மற்றும் மூலவளங்களின் ஆகக்கூடிய பயன்பாட்டிற்கு புதிய தொழில்முயற்சியாளர்களுக்கான வாய்ப்புக்களினை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பினை வழங்குவதேயாகும்.

## 2. கடமைகளும் தொழிற்பாடுகளும்

அமைச்சுக்குரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகளும் தொழிற்பாடுகளும் பினவருமாறு;

- பிராந்திய அபிவிருத்தியுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தலும் அவற்றின் பின்னூட்டிகளினைப் பெறுதலும் மதிப்பீடு செய்தலும்.
- பிராந்திய கைத்தொழில் மேம்பாடு உள்ளிட்ட பிராந்திய பொருளாதாரத்தினை பலப்படுத்துவதற்குப் பொருத்தமான பொருளாதார, சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மற்றும் கருத்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, அநுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்களில் விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- “ஹரித தனவு” காணி அபிவிருத்தி நிலையம் அல்லது இலங்கை ஹதபிம அதிகாரசபைக்கு ஏற்புடையதான கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தலும் அவற்றினை நடைமுறைப்படுத்துதல், மதிப்பீடு செய்தல் மற்றம் நிறுவனத்தினைக் கண்காணித்தல்

இந்த விடயங்களையும் தொழிற்பாடுகளினையும் முன்னெடுக்கின்ற போது பிராந்தியத்திலுள்ள பிரதேச மக்களுக்கிடையே காணப்படும் சமூக மற்றும் பொருளாதார சமமின்மைகளினைக் குறைப்பதன் மூலம் பிராந்தியங்களுக்கிடையில் காணப்படுகின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வுகளினையும் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பெறுபேறுகளினை அடைந்து கொள்வதற்காக உட்கட்டமைப்பு வசதிகளினை அபிவிருத்தி செய்வதும் விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் அவசியமானதாக அமைகின்றது. இங்கு மத்திய அரசாங்கமானது மாகாண மற்றும் பிரதேச மட்டங்களிலான அரச நிறுவனங்களினதும் ஏனைய நிறுவனங்களினதும் பரந்துபட்ட ஒருங்கிணைப்பினூடாக செய்யப்பட வேண்டியுள்ளது.

## 3. உபாய வழிமுறைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அமுலாக்கல்கள்

உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளினை முன்னெடுத்து செல்வதற்காக அமைச்சினால் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் அமுலாக்கங்கள் என்பனவும் நடைமுறைப்படுத்தப்படும்.

(அ.) வரிசை அமைச்சுக்கள், மாகாண சபைகள், அரசாங்க திணைக்களங்கள் அரசாங்க அதிகாரிகள் மற்றும் சுயாதீன ஏற்றுமதிக் குழுக்கள் என்பவற்றின் பிராந்திய அபிவிருத்தித் தேவைகள் குறித்து ஆய்வு செய்தல்

(ஆ.) அரச துறை மற்றும் தனியார் துறை பங்குடமை அல்லது உள்நாட்டு / வெளிநாட்டு தனியார் துறை நேரடி முதலீடுகளினை ஊக்குவித்தல்

(இ) கிராமிய சமூகத்தின் சமூக தேவைப்பாடுகளினை நிறைவு செய்தல்

(ஈ.) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளினை நோக்காகக் கொண்டு புதிய தொழில்நுட்ப மற்றும் விவசாய செயல்முறையிலான கைத்தொழில்களினை வழங்குதல்

(உ.) நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் அதிகளவில் அல்லது குறைந்தளவில் காணப்பட்டுவரும் மண் அரிப்பு மற்றும் மண்ணின் வளம் குன்றிப் போதல் என்பவற்றினைக் குறைக்கும் நோக்குடன் மண் பாதுகாப்பு மற்றும் சூழல் பாதுகாப்பு என்பன தொடர்பில் மக்களை ஊக்குவித்தல்.

(ஊ.) கிராமிய மற்றும் பிராந்திய வேறுபாடுகளினைக குறைப்பதற்கான சமூக மற்றும் பொருளாதார உள்ளக கட்டமைப்பு வசதிகளினை விருத்தி செய்தல்

(எ.) கிராமிய சமூக வாழ்வாதாரத்தினை விருத்தி செய்வதற்கு சிறிய அளவிலான தொழில் முயற்சியுடமை / கைத்தொழில்களினை மேற்கொள்வதற்கு வசதியளித்தலும் வேலைவாய்ப்பின்மையினைக் குறைத்தலும்

(ஏ.) கைப்பணி, உணவு உற்பத்தி மற்றும் களியாட்டத்தில் ஈடுபடுகின்ற மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளினைக் கவரும் வகையில் இயற்கை அழகு மற்றும் வரலாற்று ரீதியான முக்கிய இடங்களுக்கான வசதிகளினை அதிகரித்தல்

# 4. செயலாற்றுகை – 2017 (2017.12.31 இலுள்ளவாறு)

## 4.1.மனித வள அபிவிருத்தி

### 4.1.1 பதவியணியினர் தொடர்பான விபரங்கள்

1958/72 ஆம் இல. அதி விசேட வர்த்ததமானியின் மூலம் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விசேட கருத்திட்டங்கள் என்பவற்றின் பொதுவான நிருவாகத்திற்கும் அமுலாக்கலுக்குமென 150 பேரினைக் கொண்டுள்ள பதவியணியானது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் தன்மையினை அடிப்படையாக கொண்டு, நிரந்தர அடிப்படையில் 85 பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் எஞ்சிய 66 பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணையில் 2017.12.31 இலுள்ளவாறான பதவியணியின் விபரம் தரப்பட்டுள்ளதுடன் வெற்றிடமாகவுள்ள ஒவ்வொரு பதவியின் முன்பாகவும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| தொ. இல. | பதவி | அங்கீகரித்த பதவியணி | | 2017.12.31 இலுள்ள வெற்றிடங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | நிரந்தர | ஒப்பந்த | நிரந்தர | ஒப்பந்த |
| 1 | செயலாளர் | 1 | | | |
| 2 | மேலதிக செயலாளர் (இ.நி.சே) | 2 | | | |
| 3 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (இநிசே) | 1 | | 1 | |
| 4 | பணிப்பாளர் –அபிவிருத்தி (இ.நி.சே) | 1 | | | |
| 5 | பணிப்பாளர் – திட்டமிடல் (இ.தி.சே) | 2 | | 1 | |
| 6 | பிரதம கணக்காளர் (இ.க.சே) | 1 | | | |
| 7 | பணிப்பாளர் | | 2 | | |
| 8 | உதவி / பிரதிப் பணிப்பாளர் இ.நி.சே | 1 | | 1 | |
| 9 | உதவி / பிரதிப் பணிப்பாளர் இ.தி.சே | 2 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | உதவிப் பணிப்பாளர்<br>பிரதிப் பணிப்பாளர்<br>(அபிவிருத்தி அலகு) | | 8 | | 6 |
| 11 | உதவிச் செயலாலாளர்<br>இ.நி.சே | 1 | | 1 | |
| 12 | உதவிச் செயலாளர் தொழில் விவகாரம்<br>இ.நி.சே அல்லாத | 1 | | | |
| 13 | கணக்காளர் - இ.க.சே | 1 | | 1 | |
| 14 | உள்ளக கணக்காய்வாளர்<br>இ.க.சே. | 1 | | 1 | |
| 15 | சட்ட அலுவலர் (தற்காலிக) | 1 | | 1 | |
| 16 | நிருவாக உத்தியோகத்தர் பொ.மு.உ.சே.(சுப்ரா) | 1 | | | |
| 17 | I.C.T. அலுவலர் | 1 | | | |
| 18 | செயலாளரின் இணைப்புச் செயலாளர் | 1 | | | |
| 19 | அபிவிருத்தி அலுவலர் | 20 | 24 | 16 | 03 |
| 20 | தகவல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் | 1 | | 1 | |
| 21 | பொது முகாமைத்துவ உதவியாளர் | 20 | | 3 | |
| 22 | முகாமைத்துவ உதவியாளர் | | 12 | | 2 |
| 23 | சாரதி | 12 | 12 | 1 | 7 |
| 24 | வீடியோ படப்பிடிப்பாளர் | 1 | | 1 | |
| 25 | புகைப் படப்பிடிப்பாளர் | 1 | | 1 | |
| 26 | வீடியோ படப்பிடிப்பாளர் (உதவியாளர்) | 1 | | 1 | |
| 27 | அலுவலக உதவியார் சேவை | 10 | 08 | 1 | |
| **மொத்தம்** | | **85** | **66** | **32** | **18** |

*அட்டவணை இல. – 01*

### 4.1.2 பதவியினர் திறன்விருத்தியும் பயிற்சியும்

அமைச்சின் பெரும்பாலான அலுவலர்கள் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதால் அவர்களின் திறன் விருத்தியினை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறு பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. பதவி நிலை அலுவலர்களின் அறிவு, திறமை மற்றும் வினைத்திறன் என்பவற்றினை மேம்படுத்தும் நோக்குடன் திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன.

**உள்ளக பயிற்சி விபரங்கள்**

| பயிற்சி விடயம் | பயிற்சியில் கலந்து கொண்ட குழுக்கள் |
|---|---|
| அலுவலக முறைமையின் அடிப்படைகள் | i. அமைச்சின் பதவி நிலை அலுவலர்கள்<br>ii. இலங்கை ஹமபிம அதிகாரசபையின் பதவி நிலை அலுவலர்கள் |
| • அலுவலக முறைமை<br>• கணக்குப் பிரிவின் தொழிற்பாடும் நிதி அறிக்கையும்<br>• ஓய்வூதியம் தனிநபர் கோவைப் பேணுதலும்<br>• அலுவலக முறைமை மற்றும் லிகிதர் வேலை<br>• பெறுகைகள் நடவடிக்கைகள் | i. அபிவிருத்தி அலுவலர்கள்<br>ii. பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையிலிருந்தான அலுவலர்கள் |
| • அரச சேவைக்கு ஏற்புடைய நடத்தை மற்றும் பெறுமதிகளின் கோவை<br>• ஒழுக்கநெறியும் நடத்தையும் | i. அபிவிருத்தி அலுவலர்கள்<br>ii. பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையிலிருந்தான அலுவலர்கள்<br>iii. அலுவலக் உதவியாளர் சேவையிலிருந்தான அலுவலர்கள்<br>iv. சாரதிகள் |
| • பதவியினருக்கான வெளிக்கள ஊக்குவிப்பு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் – அநுராதபுர கலா வேவ | I. அமைச்சின் அனைத்து அலுவலர்களுக்கும் |

*அட்டவணை இல - 02*

## வெளிநாட்டுப் பயிற்சி தொடர்பான அறிக்கை

| பயிற்சி நெறி | நாடு | காலப்பகுதி | பங்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இலங்கையின் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான மாநாடு - 2017 | சீனா | 2017.04.03-2017.04.23 | 01 |
| அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நாணயச் சேவைகள் மற்றும் ஒத்துழைப்பு மீதான மாநாடு - 2017 | சீனா | 2017.06.02-2017.06.22 | 01 |
| கிராமிய பிரதேசங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களினை வலுவூட்டுவது தொடர்பான செயலமர்வு | தென் கொரியா | 2017.06.23-2017.07.13 | 01 |
| நடத்தைசார், பொருளாதார மற்றும் சூழல் கட்டியெழுப்புதல் மீதான மாநாடு - 2017 | சீனா | 2017.08.30-2017.09.21 | 01 |

*அட்டவணை 03*

### 4.2 மூலதன முதலீடு - 2017

2017 ஆம் ஆண்டுக்கென அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த வரவு செலவுத் திட்ட ஏற்பாடான ரூபா.658.426 மில்லியன் தொகையுடைய ஒதுக்கீட்டில் ரூபா..277.0 மல்லியன் மூலதனச் செலவுகளுக்காகவும் எஞ்சிய தொகையானது மீண்டு வரும் செலவுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மூலதன ஒதுக்கீட்டுக்கான ஏற்பாடுகள் பின்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| i. | உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி | - | ரூபா. | 50.0 மில். |
| ii. | பிராந்திய அபிவிருத்தி | - | ரூபா. | 100.0 மில். |
| iii. | ஹதபிம அதிகாரசபை | - | ரூபா. | 100.0 மில். |
| iv. | ஏனைய மூலதனச் செலவுகள் | - | ரூபா. | 27.0 மில். |
| | | | ரூபா. | 277.0 மில். |

அமைச்சுக்குரித்தளிக்கப்பட்ட கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளினைப் பேணும் வகையில் வகுக்கப்பட்ட 2017 வருடாந்த செயல் திட்டத்தினூடாக உத்தேச பிராந்திய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து இரண்டாம் காலாண்டின் இறுதியில் உள்ளவாறான முன்னேற்ற மீளாய்வினைத் தொடர்ந்து, பொருத்தமான வகையில் திருத்தியமைக்கப்பட்டது. அபிவிருத்தி நிகழ்சித்திட்டங்கள் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் கீழ் அதற்கிணங்கிய வகையில் அமுல்படுத்தப்பட்டன.

01. பிராந்திய உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
    - சமூக கலாச்சார அபிவிருத்தி
    - உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி
    - வாழ்வாதார அபிவிருத்தி
    - பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தனை வகுத்தல்

    } ரூபா. 50.0 மில்.

02. பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - ரூபா.100.0 மில்.

03. ஏனைய மூலதனச் செலவினம்
    - மூலதனச் சொத்துக்களின் பேணுதலும் புனரமைப்பும்
    - மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்
    - திறன் விருத்தி

    } ரூபா. 27.0 மில்.

## 4.2.1 வருடாந்த நிதி ஒதுக்கீடுகளும் நிதிசார் முன்னேற்றமும்

| | நிகழ்ச்சித்திட்டம் | 2017 இற்கான ஒதுக்கீடு (ரூ.மி) | 2017.12.31 இல் செலவினம் (ரூ.மி) | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| மீண்டுவரும் | அமைச்சரின் அலுவலகம் | 22,850,000.00 | 18,140,957.00 | 79.39 |
| | நிருவாக தொழிற்பாடுகள் | 201,761,000.00 | 177,407,715.00 | 87.93 |
| | பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 36,430,000.00 | 17,214,954.00 | 47.26 |
| | உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி | - | - | - |
| | ஹதபிம அதிகாரசபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 79,000,000.00 | 70,035,000.00 | 88.66 |
| | **உப மொத்தம்** | **340,041,000.00** | **282,798,626.00** | **83.17** |
| மூலதனம் | அமைச்சரின் அலுவலகம் | 40,225,000.00 | 24,439,304.00 | 60.76 |
| | நிருவாக தொழிற்பாடுகள் | 28,200,000.00 | 15,347,377.00 | 54.42 |
| | பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 100,000,000.00 | 24,130,178.00 | 24.13 |
| | உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி | 50,000,000.00 | 27,640,443.00 | 55.28 |
| | ஹதபிம அதிகாரசபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 100,000,000.00 | 61,802,849.00 | 61.80 |
| | **உப மொத்தம்** | **318,425,000.00** | **153,360,151.00** | **48.16** |
| மொத்தக் கூட்டுத் தொகை | | 658.466 | 272.862 | 41.4 |

*அட்டவணை இல.– 04*

### நிதிசார் ஏற்பாடுகள் மற்றும் முன்னேற்றம்



## 4.2.2. பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

| தொடர் இல. | விடயம் | கருத்திட்ட எண். | ஒதுக்கிய ஏற்பாடு (ரூ) | பௌதீக முன்னேற்றம் (%) | உண்மைச் செலவு (ரூ.) | கையிலுள்ள சிட்டைகளின் பெறுமதி (ரூ.) | முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்களின் எண். | தொடர்ந்துவரும் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வீதிகள் | 40 | 49,083,663.60 | 77 | 15,811,135.61 | 21,859,518.26 | 7 | 3,938,576.54 |
| 2 | கால்வாய்கள் / மதகுகள் / சிறிய பாலங்கள் | 6 | 6,890,000.00 | 78 | - | 5,117,805.67 | 2 | 1,336,227.80 |
| 3 | சனசமூக மண்டபங்கள் | 3 | 14,999,969.15 | 41 | - | 5,641,195.26 | 3 | 6,601,743.87 |
| 4 | குளங்கள் / அணைக்கட்டுக்கள் | 1 | 6,700,000.00 | - | - | - | - | - |
| 5 | வணக்க தலங்கள் | 3 | 9,000,000.00 | 85 | 3,902,605.99 | 3,496,502.21 | 2 | 1,406,090.76 |
| 6 | நீர் செயல்திட்டங்கள் | 2 | 8,000,000.00 | 76 | 4,000,000.00 | 1,878,924.16 | 1 | 1,646,181.62 |
| 7 | மயானம் | 1 | 5,000,000.00 | 99 | - | 4,816,133.07 | - | - |
| 8 | பாடசாலை | 1 | 195,736.40 | 100 | 195,736.40 | - | - | - |
| நிருவாகச் செலவு (களனி) | | | | | 20,700.00 | 772,023.31 | | 331,610.45 |
| மாவட்டச் செயலாளர் நிருவாகச் செலவு (கம்பஹா) | | | | | 200,000.00 | | | - |
| **மொத்தம்** | | **57** | **99,869,369.15** | **70** | **24,130,178.00** | **43,582,101.94** | **15** | **15,260,431.04** |

*அட்டவணை இல.- 05*

**அன்று...**



**இன்று.....**



பிராந்திய உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மாயா மாவத்தை வீதிக்கு கொங்றீட் இடுதல்

**அன்று...**



**இன்று....**



பிராந்திய உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், வனவல செப்பலிக வத்தை வீதிக்கு கொங்றீட் இடுதல்

## 4.2.3. பிராந்திய உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

| தொடர் இல. | விடயம் | கருத் திட்ட எண். | ஒதுக்கிய ஏற்பாடு (ரூ) | பௌதீக முன்னேற்றம் (%) | உண்மைச் செலவு (ரூ.) | கையிலுள்ள சிட்டைகளின் பெறுமதி (ரூ.) | முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்களின் எண். | தொடர்ந்து வரும் பெறுமதி (ரூ.) | நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வீதிகள் | 46 | 27,849,273.80 | 82 | 11,115,339.25 | 10,802,107.34 | 7 | 3,514,463.94 | 78.70 |
| 2 | கால்வாய்கள் / மதகுகள் / சிறிய பாலங்கள் | 3 | 2,160,000.00 | 81 | 844,320.95 | 735,222.12 | - | - | 73.13 |
| 3 | ஏனையவை | 1 | 528,000.00 | 98 | 511,310.54 | | | | 96.84 |
| 4 | சனசமூக மண்டபங்கள் | - | - | - | - | - | - | - | - |
| 5 | குளங்கள் / அணைக்கட்டுக்கள் | - | - | - | - | - | - | - | - |
| 6 | வணக்க தலங்கள் | 9 | 6,500,000.00 | 99 | 5,003,282.00 | - | - | - | 76.97 |
| 7 | நீர் செயல்திட்டங்கள் | - | - | - | - | - | - | - | - |
| 8 | மயானம் | - | - | - | - | - | - | - | - |
| 9 | வைத்தியசாலை | 1 | 300,000.00 | 99 | 291,240.00 | - | - | - | 97.08 |
| 10 | பாடசாலை | 2 | 472,350.00 | 100 | 220,000.00 | 252,350.00 | - | - | 100.00 |
| 11 | சமூக மற்றும் நாகரிக விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 54 | 5,766,350.00 | 82 | 4,963,719.79 | - | - | - | 86.08 |
| 12 | பிராந்திய வாழ்வாதார அபிவிருத்த நிகழ்ச்சித்திட்டம் | 99 | 5,424,026.20 | 75 | 3,691,230.47 | - | - | - | 68.05 |
| 13 | பிராந்திய அபிவிருத்தித் திட்டம் | 1 | 1,000,000.00 | 99 | 1,000,000.00 | | | | 100.00 |
| **மொத்தம்** | | **216** | **50,000,000.00** | **83** | **27,640,443.00** | **11,789,679.46** | **7** | **3,514,463.94** | 78.86 |

*அட்டவணை இல.06*

### 4.2.4 பன்முகப்படுத்தப்பட்ட மூலதன வரவு செலவுத்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இந்த அமைச்சிற்கு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற பன்முகப்படுத்தப்பட்ட மூலதன வரவு செலவுத்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வட மத்தி, மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள 09 மாவட்டங்களின் 63 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் ரூபா.630.0 மில்லியன் பெறுமதி வரையிலான கருத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பில் நிதிகளினை விடுவித்தல், மீளாய்வு செய்தல், அங்கீகரித்தல் மற்றும் பரிந்துரைகளினை மேற்கொள்ளுதல் போன்ற பணிக்ள உரித்தளிக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, அநுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, நுவரெலியா, கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களின்பாராளுமன்ற உறுப்பினர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 5957 கருத்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க, ரூபா. 629.45 மில்லியன் தொகையுடைய நிதி ஏற்பாடுகளினை விடுவிப்பதற்கும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| தொ.இ | மாவட்டம் | பா.உ. எண்ணிக்கை | ஏற்பாடு (ருபா.) | அங்கீகரிக் கப்பட்ட கருத்திட்ட ங்களின் எண். |
|---|---|---|---|---|
| 01. | அம்பாறை | 7 | 69,910,000.00 | 567 |
| 02. | அநுராதபுரம் | 9 | 90,000,000.00 | 1209 |
| 03. | பதுளை | 8 | 80,000,000.00 | 543 |
| 04. | மட்டக்களப்பு | 5 | 50,000,000.00 | 418 |
| 05. | கண்டி | 12 | 119,538,000.00 | 1317 |
| 06. | மாத்தளை | 5 | 50,000,000.00 | 709 |
| 07. | நுவரெலியா | 8 | 80,000,000.00 | 546 |
| 08. | பொலநறுவை | 5 | 50,000,000.00 | 453 |
| 09. | திருகோணமலை | 4 | 40,000,000.00 | 268 |
| **மொத்தம்** | | | **629,448,000.00** | **5957** |

*அட்டவணை இல.- 07*

## 4.3 அமைச்சின் உத்தியோகபூர்வ இணயத்தளத்தினை ஆரம்பித்து வைத்தல்.

பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையைத்தளமானது 2017ஒக்டோபர் 02 ஆம் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் தகவலறியும் சட்டத்தின் உரிமைக்கமைவாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் நோக்கம் இந்த அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் / வசதிகள் மற்றும் பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் போன்ற விடயங்களை மக்கள் அறிந்து கொள்வதேயாகும்.

(www.mrd.gov.lk எனும் இணையத்தள முகவரியினூடாக அணுகலாம்)






## 4.4 பிராந்திய அபிவிருத்தி அலகுகள்

16/1132/754/002 எனும் இலக்கத்தினைக் அமைச்சரவை பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் கீழ், நாடளாவிய ரீதியில் கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, அனுராதபுரம், பெலநறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய 09 பிரதான மாவட்டங்களில் பொருளாதார விருத்தியினை மேம்படுத்தும் நோக்குடன் விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களை நெறிப்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் இரண்டு பிராந்திய அபிவிருத்தி அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளன.

### பிராந்திய அபிவிருத்தி அலகுகளினூடாக வழங்கப்படும் சேவைகள்

- பாரிய அபிவிருத்திக் கருத்திட்டங்களை முன்னெடுக்க விரும்புகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வசதிகளினை வழங்குதல்
- உரிய அமைச்சுக்களிலிருந்து பின்வரும் சேவைகளினைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளினை ஏற்படுத்திக் கொடுத்தல்
  - உகந்த காணியினைத் தெரிவு செய்தல்
  - அணுகு வீதிகளினை விருத்தி செய்தல்.
  - சூழல் பாதிப்பு இசைவாணைச் சான்றிதழினைப் பெறுதல்.
  - கட்டிப் பொருட்களினைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிகளினை வழங்குதல்.
  - மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி வசதிகளினைப் பெற்றுக் கொள்ளல்
  - கம்பனிகள் / வியாபார தாபனங்களைப் பதிவு செய்தலும் புவிசார் மற்றும் சுரங்கமறுத்தல் தாபனங்களிலிருந்து அங்கீகாரத்தினைப் பெறுதலும்
- மனிதவள மற்றும் பயிற்சித் தேவைப்பாடுகளினை நிறைவு செய்தல்
- நிருமாணம் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கான உள்ளக கட்டமைப்பு வசதிகளினை வழங்குதல்

### 4.4.1 மத்திய அபிவிருத்தி அலகு

கண்டி, மாத்தளை, நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் மத்திய அபிவருத்தி அலகினால் முதலீடு செய்யப்பட்ட கருத்திட்டங்களினை ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க, காற்றாலை மின்பிறப்பாக்க, சுற்றாடலுக்கு பங்கம் விளைவிக்காத சுற்றுலா மற்றும் விவசாய கருத்திட்டங்களினை முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சூழலுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் மதிப்பாய்வுகளுடன் தொடர்புடைய பிரச்சனைகள் மற்றும் போதுமான நிதி கிடைக்காமை போன்ற காரணங்களினால் அவற்றினை அமுல்படுத்த முடியாத நிலை தோன்றியிருந்தது.

தற்போது மத்திய அபிவிருத்தி அலகானது வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவருடன் இணைந்து சூழலுக்குப் பாதிப்பு ஏற்படா வண்ணம் பதுளை மாவட்டத்தில் எல்லவில் சுற்றுலாக் கருத்திட்டமொன்றினை முன்னெடுப்பதற்குத் திட்டமிடுகின்றது. இதற்கான முதலீடு அ.டொலர் 25 மில்லியன் ஆகும். இத்தகைய உத்தேச முதலீடானது குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்குத் துணை புரியும்.

## 4.4.2 கிழக்கு அபிவிருத்தி அலகு

கிழக்கு அபிவிருத்திப் அலகானது அநுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களினை உள்ளடக்குகின்றது.



திருகோணமலை மாவட்டத்தில் 100 மில்லியன் அ.டொலர் வெளிநாட்டு முதலீட்டில் ஹோட்டல்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் நிருவாக கட்டிடங்கள் என்பவற்றினைக் கொண்டதாக ஓசன் கிளாஸ் (Ocean Class) யாச்ற் மரினாவினைத் (Yacht Marina) தாபிப்பதற்குஉத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த நிருமாணப் பணியினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விசைப் படகுப் போக்குவரத்து கருத்திட்டமானது அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சானது சுவிஸ் சலஞ் முறையில் ஒப்டையினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, அவற்றினை அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக் கருத்திட்டமானது ஏறக்குறைய 2000 நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புக்களினை வழங்குவதற்கும் இலங்கையானது பெருமளவிலான அந்நியச் செலாவணியினைச் சம்பாதிப்பதற்கும் வழிவகுக்கும். இக்கருத்திட்டமானது திருகோணமலை மாவட்டத்தில் சுற்றுலாத் துறையினை மேம்படுத்துவதில் நேரடியாக செல்வாக்குச் செலுத்துகின்றது.



சீனித் தொழிற்சாலையின் அமைவிடம்

அத்துடன், கருத்திட்ட முன்மொழிவானது பாற் பண்ணை கருத்திட்டத்துடன் சீனித் தொழிற்சாலையின் நிருமாணத்திற்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன் கொம்போஸ்ட் வளமாக்கி உற்பத்தி செய்யும் பொறித்தொகுதியானது இதனுடன் இணைந்துள்ளது. இந்தக் கருத்திட்டமானது ஏறக்குறைய 625 நேரடி வேலைவாய்ப்புக்களுக்கும் 1600 மறைமுக வேலை வாய்ப்புக்களுக்கும் வழி வகுக்குமெனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டம் தொடர்பான முதலாவது சுற்றுக் கலந்துரையாடலானது ஏற்கனவே நடாத்தப்பட்டுள்ளதுடன் இக் கருத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கான ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# பகுதி II

# இலங்கை ஹதபிம அதிகாரசபை

**நோக்கு:**

**"தரமான விவசாய உற்பத்திக்கான மிகச் சிறந்த விவசாய செயற்பாடுகளினை ஊக்குவிப்பதில் முன்னோடியாக விளங்குதல்"**

**செயற்பணி:**

**"ஒருங்கிணைந்த விவசாய கைத்தொழில்களை ஊக்குவிப்பதனூடாக உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்தலும் நீடித்து நிலைத்திருக்கும் இயற்கை வளங்களை பாதுகாத்தலும்"**

## 1. அறிமுகம்

இலங்கையில் பெருநதோட்டப் பயிற்செய்கைக்கு மத்திய மலைநாடு மிகவும் உகந்த பிரதேசமாக காணப்பட்டமையால் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் பெருந்தோட்டப் பயிற்செய்கை அங்கே மேற்கொள்ளப்பட்டது. அங்கே காடுகள் சூழ்ந்திருந்தமையால் சூழவியலினை சமமாகப் பேணுவதில் பாதகமான தாக்கத்திற்குட்படுவது மிகவும் குறைவாகும். பின்னர் அத்தகைய நிலங்களில் முறையான பேணுதல் செய்பாடுகள் மேற்கொள்ளப்படாமையினால் மன் வளம் குன்றி மண் அரிப்பும் மண் சரிவும் ஏற்படுவது மிகவும் பாரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. இது தேசிய மட்டத்தில் பல்வேறு சூழல் சார்ந்த பிரச்சனைகளுக்கு வழி சமைத்துள்ளது. இத்தகைய பாதகமான நிலையினை குறைக்கும் பொருட்டு, ஆட்சியில் இருந்த அரசாங்கமானது 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அர விவசாயக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் நியதிகளின்படி, தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபையினைத் (NADSA) தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

அதனைத்தொடர்ந்து, அதிகாரசபையின் உத்தியோகபூர்வ பெயரானது இலங்கை ஹதபிம அதிகாரசபையாக ("ஹரித தனவு" காணி அபிவிருத்தி நிலையம்) திருத்தியமைக்கப்பட்டது. 2016 மார்ச்சிலிருந்து பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் கீழ்தொழிற்பட்டு வருகின்ற இந்த நிறுவனமானது, 2017.07.07 ஆம் திகதிய 2026/45 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் திருத்தியமைக்கப்பட்ட நியதிகளின்படி, புதிய அபிவிருத்தி உபாயங்களினைக் கண்டறிவதற்கும் அதிகாரசபையின் கருத்திட்ட சமூக விடயத்தினை நாடு பூராகவும் விரிவாக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**2. உரித்தளிக்கபட்ட விடயங்கள்**

விவசாய பல்வகைப்படுத்தலுடன் தொடர்புடைய கருத்திட்டங்களைத் திட்டமிடுதலும் அமுலாக்குதலும், குடியேற்றங்களினை மேம்படுத்துதல் மற்றும் முழுமையாக இணைந்த நீர்ப் பிரிவு முகாமைத்துவம்.

1. சூழல் பாதுகாப்பு, நிலம் மற்றும் நீர் மூலவளங்களைப் பாதுகாத்தல் மற்றும் குடியேற்ற அபிவிருத்தியினை ஏற்படுத்துவதுடன் தொடர்புடைய முகாமைத்துவ நடவடிக்கைகள்
2. விவசாய உற்பத்திகளினை பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைளில் ஈடுபடுதல்
3. வர்த்தகசார் விவசாய மற்றும் விவசாய தொழில் நிறுவனங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளினை ஊக்குவித்தலும் தேவையான வசதிகளினை ஏற்படுத்திக் கொடுத்தலும்.
4. விவசாய அடிப்படையிலான முதலீடுகளினை திட்டமிடுதலும் அவற்றின் அமுலாக்கலுக்குத் தேவையான சேவைகளினை வழங்குதலும் மற்றும் கிடைக்கக்கூடிய நிபுணர்களின் அறிவினை உறுதி செய்தலும்.

திறைசேரியானது 2017 ஆம் ஆண்டுகான அபிவிருத்திக்கென மூலதனச் செலவாக ரூபா.100 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளதுடன் 2017.12.31 வரையில் பின்வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ரூபா.55.60 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், மீண்டுவரும் செலவுகளுகாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூபா.79 மில்லியனில் அமைச்சின் தொழிற்பாட்டு மற்றும் நிறுவனசார் தேவைப்பாடுகளுக்காக ரூபா.70.93 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## 3. 2017 செயலாற்றுகை (2017.12.31 ஆம் திகதியன்று)

## 3.1.மனிதவள விருத்தி

### 3.1.1. ஊழியர் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள்

| தொடர் இல. | பதவிப் பெயர் | அங்கீகரித்த ஊழியர் எண். | தற்போதுள்ள ஊழியர் எண். | வெற்றிடங்களின் எண். |
|---|---|---|---|---|
| 01 | நிறைவேற்றுப் பணிப்பாளர் | 1 | 1 | |
| 02 | உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) | 1 | | 1 |
| 03 | உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 1 | 1 | - |
| 04 | உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் (நிதி) | 1 | 1 | - |
| 05 | உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) | 1 | 1 | - |
| 06 | உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் (கருத்திட்டம் மற்றும் திட்டமிடல்) | 1 | 1 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 07 | நிருவாக உத்தியோகத்தர் | 1 | 1 | - |
| 08 | நிதிப் பொறுப்பதிகாரி | 1 | 1 | |
| 09 | சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் | 1 | | 1 |
| 10 | விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2 | 1 | 1 |
| 11 | உள்ளக கணக்காய்வு அலுவலர் | 1 | 1 | - |
| 12 | வலய உத்தியோகத்தர் | 12 | 11 | 1 |
| 13 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 1 | - | 1 |
| 14 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சார்ந்த) | 35 | 32 | 3 |
| 15 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) | 19 | 18 | 1 |
| 16 | காசாளர் | 1 | 1 | - |
| 17 | இயந்திர இயக்குனர் | 2 | 1 | 1 |
| 18 | ஒலி, ஒளி உதவியாளர் | 1 | 1 | - |
| 19 | தொழில்நுட்ப உதவியாளர் | 2 | - | 2 |
| 20 | சாரதி | 14 | 12 | 2 |
| 21 | அலுவலக உதவியாளர் | 4 | 4 | - |
| 22 | கிளீனர் | 3 | 2 | 1 |
| 23 | காவலாளி | 4 | 4 | - |
| 24 | தோட்ட வேலையாள் | 2 | 2 | - |
| 25 | பண்ணைத் தொழிலாளர்கள் (பள்ளேவல மற்றும் கொத்மலை) | 13 | 13 | - |
| **மொத்தம்** | | **125** | **110** | **15** |

*அட்டவணை இல.- 08*

*2014/25 ஆம் இல. சுற்றறிக்கைகிணங்க, நிரந்தரமாக்கும் வகையில் பள்ளேகல மற்றும் கொத்மலை பண்ணைத் தொழிலாளர்களில் 13 பேருக்கு தனிப்பட்ட முறையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் DMS/1578/VII ஆம் இல.மற்றும் 2016-05-03 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## 3.2 மூலதன முதலீடு

### 3.2.1. மண் பாதுகாப்பு மற்றும் நீர் வரப்பு முகாமைத்துவம்

இந்த நிகழ்ச்சித்திட்டமானது விவசாய சமூகத்தின் பொருளாதாரத்தினை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி பிரதேசங்களில் மண்ணரிப்பினைக் குறைப்பதன் மூலம் பிராந்தியத்திலுள்ள நீர் மூலங்களினைப் பாதுகாக்கும் நோக்குடன் அமுல்படுத்தப்படுகின்றதுடன் அத்தகைய நடவடிக்கைகள் பின்வருமாறு;

- அடிப்படைப் பாதுகாப்பு திட்டமிடல்
- தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி
- மண் பாதுகாப்பு மாதிரிகளினை தாபித்தல்
- நீர் மூலவளப் பாதுகாப்பு
- “சோபா சிசுநென போர” பாடசாலை சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்சித்திட்டம்
- மண் பாதுகாப்புக் கட்டமைப்பினை தாபித்தலும் அவற்றின் செயற்பாடுகள் பின்வருமாறு.



நீர் மூலவளப் பாதுகாப்பு



“சோபா சிசுநென போர” பாடசாலை சுற்றாடல்





மண் பாதுகாப்புக் கட்டமைப்பினை தாபித்தல்

### 3.2.2 பண்ணைகளுக்கு வெளியேயான மண் பாதுகாப்பும் கழிவு நீர் முகாமைத்துவமும்

அதிகூடிய சனத்தொகைப் பரம்பலினைக் கொண்டுள்ள பிரதேச செயலக பகுதிகளில் பல்வேறு மனித மற்றும் காலைநிலை காரணங்களினால் பாதிப்படைந்துள்ள பண்ணைகளுக்கு வெளியேயான பகுதிகளில் கழிவு நீர் வழிந்தோடும் முறைமையினை சீரமைப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





**பண்ணைகளுக்கு வெளியேயான மண் பாதுகாப்பும் கழிவு நீர் முகாமைத்துவமும்**
**தெரிவு செய்யப்பட்ட இடம் - களனி பிரதேச செயலகப் பிரிவு**

### 3.2.3 நண் ந□ொெமண னெைொமநத்துயம்

சேதன வளமாக்கி உற்பத்தியினை பயன்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல் நிகழ்ச்சித்திட்டமானது மண் அரிப்பு மற்றும் மண் தரம் குன்றுதல் போன்வற்றினைக் கருத்தில் கொண்டு காணிகளினைப் புனரமைப்புச் செய்வதற்காக அமுல்படுத்தப்பட்டதுடன் இதன் கீழ் 100 மாதிரிப் பண்ணைகளினை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





**சேதன வளமாக்கி உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்**

### 3.2.4. காணி உற்பத்தித் திறனும் பயிர்களைப் பல்வகைப்படுத்துதலும்

மண் அரிப்பு மற்றும் மண்ணின் தரங் குன்றுதல் போன்றவற்றினால் அத்தகைய காணிகளுக்கு உகந்த வகையில் பல்வேறு பயிர்களினை அறிமுகப்படுத்துவதற்காகன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க, விதைகள் மற்றும் பயிரிடல் பொருட்கள் விவசாயிகளுக்குக் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.




**பயிற்செய்கை நிகழ்ச்சித்திட்டம் – விலகமுவ பி.செ.பிரிவு**

### 3.2.5 நிறுவனம்சார் அபிவிருத்தி நடவடிக்கைகள்

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளினையும் வினைத்திறனுடனும் பயனுறுதி வாய்ந்த வகையிலும் முன்னெடுப்பதற்கு நிறுவனத்திலுள்ள மனித மற்றும் பௌதீக வளங்களினை விருத்தி செய்யவது இன்றியமையாததாகும். அதற்கிணங்க, மனித வள அபிவிருத்தி, பௌதீக வள அபிவிருத்தி, ஊடக மற்றும் பிரசித்தப்படுத்தல், நிறுவனசார் அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வு மற்றும் விடயத்துடன் தொடர்புடைய உசாவுதல்கள் என்பன இந்த பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டுள்ளதடன் இத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ரூபா.4.0 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2017.12.31 இலுள்ளவாறான நிதிசார் முன்னேற்றம் ரூபா.3.73 மில்லியனாகும். இதன் வீதாசாரம் 93% ஆகும்.

### 3.2.6 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

| தொ.இல | நிகழ்ச்சித்திட்டம் | அலகு | இலக்கு | | பௌதீக முன்னேற்றம் (%) | உண்மைச் செலவினம் (ரூ.) | கையிலுள்ள சிட்டைகளின் பெறுமதி (ரூ.) | தொடர்ந்து வரும் செலவு (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பௌதீக | நிதி | | | | |
| 1 | மண் பாதுகாப்பு மற்றும் நீர்ப் பிரிவு முகாமைத்துவம் | கருத்திட்டம் | 7 | 62.4 | 74% | 46,433,755.43 | 11,440,707.00 | |
| 2 | பண்ணைக்கு வெளியேயான மண் பாதுகாப்பு மற்றும் கழிவுநீர் முகாமைத்துவம் | கட்டமைப்புக்கள் | 27 | 27.5 | 18% | 5,264,281.77 | 10,116,927.00 | 5,194,817.71 |
| 3 | சேதனப் பண்ணை அபிவிருத்தி | சேதனப் பண்ணைகள் | 100 | 0.1 | 76% | 76,000.00 | | |
| 4 | காணி உற்பத்தித்திறன் மற்றும் பயிற்செய்கை | விவசாய குடும்பங்கள் | 4,500 | 6.0 | 90% | 5,451,929.00 | | |
| 5 | நிறுவனசார் விருத்தி | | | 4.0 | 92% | 3,728,194.88 | | |
| **மொத்தம்** | | | **4,634** | **100** | | **60,954,161.08** | **21,557,634.00** | **5,194,817.71** |

*அட்டவணை இல- 09*

### 3.2.7 தேசிய உணவு உற்பத்தி இலக்கு - 2017

தேசிய உணவு உற்பத்திக்குச் சமாந்திரமாக, பிராந்திய அபிவிருத்தி அமைச்சானது அதற்குப் பங்களிப்புச் செய்வதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களினை அமுல்படுத்தியுள்ளது. அவற்றுள், விழிப்பணர்வு மற்றும் தொழில்நுட்ப பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம், குறுகிய காலத்தில் ஒரு இலட்சம் மரங்களை நாட்டுதல், இடைக்கால நிரந்தரப் பயிர்களைப் பயிரிடல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் 2017 இல் அமுல்படுத்தப்பட்டன. அதற்கிணங்க, விவசாயிகளுக்கு பயிர்களினை வழங்குவதற்கும் எற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தேசிய உணவு உற்பத்தி இலக்கிற்கு சமாந்தரமாக பயிரிடப்பட்ட தாவரங்கள்**

| தொ.இ | பயிர் வகை | தாவரங்களின் தேவைப்பாடுகள் |
|---|---|---|
| 1 | மிளகு | 55393 |
| 2 | தேங்காய் | 4419 |
| 3 | ஒட்டு எலுமிச்சை | 4588 |
| 4 | விதை மாதுளை | 3825 |
| 5 | ஒட்டு ரம்புட்டான் | 1647 |
| 6 | ஒட்டு டுறியான் | 1250 |
| 7 | ஒட்டு பெலி | 250 |
| 8 | தோடம்பழம் | 1547 |
| 9 | ஒட்டு அவகாடோ | 650 |
| 10 | ஒட்டு மாம்பழம் | 2088 |
| 11 | எலுமிச்சை | 89 |
| 12 | ஒட்டுப் பலா | 500 |
| 13 | செவ்விளநீர் (உள்ளூர்) | 500 |
| 14 | நெல்லி | 100 |
| 15 | மிளகாய் பயிரிடும் தொட்டிகள் | 500 |
| 16 | ஒட்டு எலுமிச்சை | 3842 |
| 17 | மரக்கறி பயிர்கள் | 22866 |
| 18 | அலங்கார | 757 |
| 19 | ஒட்டுப் பயிர்கள் | 6989 |
| **மொத்தம்** | | **111,800** |

*அட்டவணை இல- 10*



கௌரவ அமைச்சரினால் மரக்கன்றுகள் விநியோகிக்கப்படுதல்



பயிற்செய்கை நிகழ்ச்சித்திட்டம்,
தெல்தோட்டை பி.செ.பிரிவு



பதலீட்டு பயிற்செய்கை நிகழ்ச்சித்திட்டம், லக்கல